**30.10.2023–ம் தேதி 3.00 மணியளவில் நடைபெற்ற நகர்மன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள் முன்னிலை திரு.சே.முத்துத்துரை.பி.காம்.அவர்கள்**

## பொருள்

| | | |
|---|---|---|
| 1 | காரைக்குடி நகராட்சியானது 09.05.1928–ல் பேரூராட்சியில் இருந்து மூன்றாம் நிலை நகராட்சியாக தரம் உயர்வு செய்யப்பட்டது. அப்போதைய நகராட்சியின் பரப்பளவு 13.75 சதுர கிலோ மீட்டர் ஆகவும், மக்கள் தொகை 15350, நகர்மன்ற வார்டுகளின் எண்ணிக்கை 18 ஆக இருந்துள்ளது. அதன் பிறகு படிப்படியாக வருவாய் அடிப்படையில் தரம் உயர்த்தப்பட்டு கடைசியாக அரசாணை எண் 74, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 28.05.2013–ன் படி சிறப்பு நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. அதன் பரப்பளவு 13.75 ச.கி.மீ 2011–ம் ஆண்டைய மக்கள் தொகை 106793 ஆகவும் 36 நகர்மன்ற வார்டுகளாக கொண்டும் தற்போது வரை செயல்பட்டு வருகிறது. தற்போதைய இந்நகராட்சியின் ஆண்டு வருமானம் 47.48 கோடியாகவும் உள்ளது.<br><br>காரைக்குடி நகராட்சியினை மாநகராட்சியாக தரம் உயர்த்த நகராட்சியின் எல்லையை ஒட்டி அமையும் ஊராட்சிகளான சங்கராபுரம், இலுப்பக்குடி, அரியக்குடி, கோவிலூர் மற்றும் தளக்காவூர் (மானகிரி) மற்றும் பேரூராட்சிகளான கோட்டையூர் மற்றும் கண்டனூர் ஆகியவற்றை இணைக்கலாம்.<br>சங்கராபுரம் ஊராட்சி மற்றும் இலுப்பக்குடி ஊராட்சி பகுதிகளில் அமைந்துள்ள அழகப்பா பல்கலைக்கழகம் மற்றும் பொறியியல், கலைக்கல்லூரிகள், தொழில் நுட்ப கல்லூரிகளும் இயங்கி வருவதால் காரைக்குடி நகரம் உயர் கல்வித்துறையில் முக்கிய இடத்தில் உள்ளது. அத்துடன் வணிக நிறுவனங்கள் மற்றும் குடியிருப்புகள் அதிகளவு நிறைந்த பகுதியாக உள்ளதை அடிப்படையாக கொண்டு மாநகராட்சியாக தரம் உயர்த்தும் பொழுது நகராட்சிக்கு கூடுதல் வருவாய் ஏற்படுவதுடன் அப்பகுதியில் வாழும் பொதுமக்களுக்கு அடிப்படை கட்டமைப்பு வசதிகளை கூடுதலாக ஏற்படுத்தித் தர வாய்ப்பாக அமையும்.<br>மேலும் அரியக்குடி, கோவிலூர் ஆகிய பகுதிகளில் பழைமை வாய்ந்த கோவில்கள் அமைந்துள்ளதால் சுற்றுலா தளமாக திகழ்ந்து வருகிறது. எனவே மேற்காணும் ஏழு உள்ளாட்சி அமைப்புகளை இணைத்து காரைக்குடி நகராட்சியை மாநகராட்சியாக தரம் உயர்த்தும் பட்சத்தில் அரசின் நிதி உதவியுடன் மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | **தீர்மான எண்.319**<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | மேற்காணும் உள்ளாட்சிகளுடன் காரைக்குடி நகராட்சியுடன் இணைக்கும் பொழுது, 2011–ம் ஆண்டுடைய மக்கள் தொகை 180645 என்றளவில் உள்ளது இச்சூழ்நிலையில் காரைக்குடி நகராட்சி மற்றும் அருகாமையிலுள்ள ஏழு உள்ளாட்சிகளின் ஆண்டு வருமானம் என்பது தற்போதைய நிலையில் 65.61 கோடியாக உள்ளது. ஆதலால் காரைக்குடி நகராட்சியுடன் அதன் அருகாமையிலுள்ள 7 உள்ளாட்சி அமைப்புகளும் நகர்ப்புற வளர்ச்சிக்கு ஏற்றாற் போல் வளர்ச்சியடைந்து வருவதால் காரைக்குடி நகராட்சியை மாநகராட்சியாக தரம் உயர்த்திட நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்கள் வழியாக தமிழக அரசை கேட்டுக் கொள்ள உரிய பிரேரணையை அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு–**<br>காரைக்குடி நகராட்சி 13.75 சதுர மீட்டர் 2011ம் ஆண்டைய மக்கள் தொகை 1,06,793 ஆகவும் 36 நகர்மன்ற வார்டுகளாக கொண்டு பெருநகராட்சியாக இயங்கி வருகிறது. தற்போது இந்நகரத்தை சுற்றியுள்ள பேரூராட்சிகளில் 1.கோட்டையூர் மற்றும் 2. கண்டனூர், ஆகிய இரு பேரூராட்சிகளும் ஊராட்சிகளில் 1. சங்கராபுரம், 2. இலுப்பக்குடி, 3. அரியக்குடி 4.கோவிலூர் மற்றும் 5. தளக்காவூர் (மானகிரி) ஐந்து ஊராட்சிகளை காரைக்குடி நகராட்சியுடன் இணைத்து காரைக்குடி மாநகராட்சியாக தரம் உயர்த்திட மன்றம் அனுமதிக்கலாம். | |

(ஒம்/...திரு.சே.முத்துத்துரை),
நகர்மன்றத்தலைவர்

//உண்மை நகல்//

ஆணையாளர்,
காரைக்குடி நகராட்சி